விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 மாசி 15 ஜ. அவ். 13 இதழ் 17

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 27—2—83

## 'ஆலால்' இடுப்பில் இருக்கும் குண்டு அகற்றத்தேவையில்லை!

[யாழ்ப்பாணம்]

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் கோப்பாய் எம். பி திரு எம். ஆலாலசுந்தரத்தின் வலது பக்கஇடுப்பு மூட்டில் இருக்கும் குண்டு அகற்றப்பட வேண்டிய அவசியமில்லை என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. அவரது காயங்கள் ஆறிக்குணமான பின்னரும் அந்தக்குண்டு அப்படியே இருப்பதால் எவ்வித கெடுதியும் ஏற்படமாட்டாதாம்!

தமிழக முதல்வர் எம். ஜி ஆரின் தாடையிலும் ஒரு குண்டு அப்படியே இருக்கிறது எம் ஆர் ராதா சுட்ட போது இக்குண்டுதாடைக்குள் நுழைந்தது. ஆயினும் அது அகற்றப்படவில்லை. அவரது குரலில் சிறிது மாற்றம் ஏற்பட்டதே ஒழிய, எவ்வித கெடுதியும் ஏற்படுத்தவில்லை.

நேற்று சத்திரசிகிச்சை செய்யப்பட்ட இடத்தைச் சோதனை செய்த டாக்டர்கள் அப்பகுதியில் உணர்வு இருப்பதால், ஆலாலின் காலில் எவ்வித பாதிப்பும் ஏற்பட மாட்டாதெனத் தெரிவித்தனர்.

இப்போதைக்கு அவர் இடுப்பு மூட்டுப்பக்கத்திலுள்ள குண்டு அகற்றப்பட வேண்டிய அவசியமில்லையென்றும், இது குறித்து அவர் குணமான பின்னர் முடிவு எடுக்கப்படுமென்றும் மேலும் வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

'ஓ'குறூப் இரத்தமும் ஆலாலுக்கு ஏற்றப்பட்டுள்ளது. (மா)

# யாழ். மாவட்ட அமைச்சுக்கு ரூ. 27,500,000 நிதி ஒதுக்கீடு!

## கொழும்புக்கேகூடிய தொகை

(இ. கந்தசாமி)

வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின்படி யாழ்ப்பாண மாவட்ட அமைச்சின் பொது செலவினங்களுக்கென ரூ. 27,500,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணம் அமைச்சின் நிர்வாகத்தை நடத்தவும் மாவட்ட வரவு செலவுத் திட்டங்களை செயல்படுத்தவும் பயன் படுத்தப் படும்.

மாவட்ட அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளில் கொழும்பு மாவட்ட அமைச்சுக்கே ஆகக்கூடுதலான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவதாகக்கண்டியும் மூன்றாமிடத்தை குருநாகலும் வகிக்கின்றன. யாழ்ப்பாணம் நான்காம் இடத்தை வகிக்கின்றது.

கொழும்பு மாவட்டத்துக்கு ரூ. 42,500,000 ஒதுக்கப்பட்டுள்ளது. கண்டிக்கு ரூ 37,500,000வும் குருநாகலுக்கு ரூ 35,000,000வும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்துக்கு ரூ 2,500,000, வவுனியா மாவட்டதுக்கு ரூ 2,500,000 முல்லைத்தீவுக்கு ரூ 2,500,000 மட்டக்களப்புக்கு ரூ 10,000,000, அம்பாறைக்கு ரூ 12,500 000 திருகோணமலைக்கு ரூ 7,500,000 ஒதுக்கப்பட்டுள்ளது. (இ)

## ஐந்து இளைஞர்களும் நேற்று விடுதலை!

(யாழ்ப்பாணம்)

இரு இராணுவமுகாமிலிருந்தும் ஐந்து இளைஞர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டார்கள்! குருநகர் ராணுவ முகாமில் வைக்கப்பட்டிருந்த இரு இளைஞர்களும், பலாலி ராணுவ முகாமிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்ட மூன்று இளைஞர்களுமே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

வன்முறைச் சம்பவங்களில் எதிர்காலத்தில் ஈடுபடவேண்டாமென குருநகர் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் குலத்துங்க விடுதலையான இந்த இளைஞர்களிடம் கூறி, வழி அனுப்பிவைத்தார்.

தம்பையா மரியநாயகம் சவரிமுத்து பொன்னம்பலம். நாகமணி இளையசிங்கம் தேவராஜா. நாகமணி இளையசிங்கம் சந்திரசேகரம். இவ்விரு

(10ம் பக்கம் பார்க்க)

## புதிய சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் முக்கிய இடங்களில், பல புதிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. கூட்டுறவு இயக்கம் சம்பந்தமாகவும் கூட்டணிக்கு எதிராகவும் இந்தச்சுவரொட்டிகளில் எழுதப்பட்டுள்ளன.

## ✯ அணிசேராநாடுகள் உச்சிமகாநாடு: மார்ச்3ல்ஜனாதிபதி புதுடில்லி பயணம்

[கொழும்பு]

அணிசேரா நாடுகள் உச்சி மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக, ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், பாரியாரும் அடுத்த மாதம் 3ம் திகதி புதுடில்லி பயணமாகிறார்கள்.

புதுடில்லியில் ஜனாதிபதியும், பாரியாரும் பன்னிரண்டு நாட்கள் தங்கியிருப்பார்கள்.

மார்ச் 3ம் திகதி பயணமாகும் ஜனாதிபதி அடபதியக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் எவ்விதமான உத்தியோகபூர்வமான நிகழ்ச்சிகளும் நடைபெறமாட்டாது.

மார்ச் 14ம் திகதிவரையிங்கு தங்கியிருக்கும் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன, மகாநாட்டில் கலந்துகொள்ள வரும் உலகத் தலைவர்கள் பலரையும் தனித்தனியாகச் சந்தித்துப் பலவேறு பிரச்னைகள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதுடில்லியில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடனும் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடாத்துவார்.

அணிசேரா நாடுகளின் மகாநாட்டில், உலக நாடுகள் பலவற்றை இப்போது எதிர்நோக்கும் வேலையில்லாப் பிரச்னை, பசிப்பிணி, மற்றும் பொருளாதார நெருக்கடி குறித்து ஜனாதிபதி உரை நிகழ்த்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உபாலிஜெட் தேடுதல் இன்று ஆராய்வர்

(கொழும்பு)

உபாலி விஜேவர்த்தனா பயணம் செய்த லியர்ஜெட் விமானத்தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட இந்தோனேஷியா அதிகாரிகள் முன்னேற்றம்குறித்து இன்று மதிப்பீடு செய்வதற்காக மகாநாடு ஒன்றை நடாத்துவதாக இலங்கை வானொலிச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை முதல் மெடானுக்கு அப்பால் விமானத்தின் கல்லுக்கு கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் தேடுதலை இந்தோனேஷியா கடற்கண்ணி அகற்றும் கப்பல் நடாத்திவருகிறது.

## தொழிலாளர்களுக்கு சேவைகாலப்பணம் 35லட்சம் பேருக்கு நன்மை!!

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் சகல கட்டங்களிலும் தொழிலாளர் சேவைக்கால (கிருற்டியுட்டி) பணம் கொடுப்பனவு சட்ட மூலம், நிறைவேற்றப்பட்டுள்ளது இதனால் 35 லட்சம் தொழிலாளர்கள் நன்மையடைவர்.

இச்சட்டத்தின் மூலம் ஒரு

[10-ம் பக்கம் பார்க்க]

## தவறணையிலிருந்து வீடு திரும்பியவர் சுடப்பட்டார்!

(மன்னார்)

கள்ளுத்தவறணையில் கள்ளருந்திவிட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த நபர் ஒருவர் துப்பாக்கியால் சுடப்பட்டார். இவர் பலத்த காயங்களுடன் மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் உயிலங்குளம் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஜே. அந்தோனிமுத்து என்பவரே துப்பாக்கியால் சுடப்பட்டு பலத்த காயத்துடன் உயிர்தப்பியவராவர்.

துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் பற்றி மன்னார் பொலிசில் புகார் செய்ததையடுத்து அதே இடத்தைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர், துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு பாவிக்கப்பட்ட துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டது. (க)

## "அனுமதி வழங்கவில்லை"

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் 1981ம் ஆண்டு நிதி வருடத்திற்கு கணக்காய்வு எண்பார்வை செய்யப்பட்டு ஏற்கனவே சங்கத்திற்கு கையளிக்கப்பட்ட எண் பார்வை அறிக்கையில் எதுவித மாற்றமும் செய்வதற்கு எனது அனுமதி வழங்கப்படவில்லை என்று கூட்டுறவு உதவி ஆணையாளர் (எண்பார்வை) திரு இ. ஜெகநாதன் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## அல்போன்சஸ் அத்தனுசியார் வைத்தியசாலை

மாதகல் வீதி-பண்டத்தரிப்பு

இதுவரை காலமும் பண்டத்தரிப்பு தபால் நிலையத்திற்கு அருகாமையில் இயங்கி வந்த மேற்படி வைத்தியசாலை தற்போது இதற்கருகிலுள்ள எமது புதிய இல்லத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சிகிச்சை நேரம்

காலை 7-30 மணி தொடக்கம் நண்பகல் 1மணிவரை.
பிற்பகல் 3-30 மணி தொடக்கம் இரவு 10மணி வரை.

குறிப்பு: ஞாயிறு, வியாழன் ஆகிய தினங்களில் காலை 6 மணி முதல் முற்பகல் 10 மணி வரை காரை நகர் ஆலடியிலுள்ள எமது வைத்தியசாலையில் வழமை போல சிகிச்சையளிக்கப்படும்.

இங்ஙனம்
வைத்திய கலாநிதி
அல்போன்சஸ் அத்தனுசியார்

மாதகல் வீதி,
பண்டத்தரிப்பு. 6351

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ் இந்துக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரிகளுக்கு மிகச் சமீபத்தில் சகல வசதிகளும் கொண்ட பெரிய வீடு $2\frac{1}{2}$ பரப்புக் காணியுடன் விற்பனைக்கு உண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 6274 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். [6274]

$2\frac{1}{2}$ பரப்புக் காணி சகல வசதிகளுடன் உள்ள கல்வீட்டுடன் விற்பனைக்குண்டு தொடர்புகொள்ளவும் இராமலிங்கம் 13/1 நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [6329]

நல்லூர், கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் சகலவசதிகளும் கொண்ட வீடு, $3\frac{1}{2}$ பரப்புக் காணியுடன் விற்பனைக்கு உண்டு. 2 பரப்பும் வீடுமாகப் பிரித்தும் கொடுக்கப்படும். இது தொழிற்சாலை அமைப்பதற்கும் உகந்தது. N. விஜயநாதன், 34/2, செட்டித் தெரு, நல்லூரில் அல்லது கொழும்பில் குமார். Telephone No: 549365. உடன் தொடர்பு கொள்ளவும். [6334]

சிறிய கல்வீட்டுடன் ஒரு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு நேரில் வரவும். இலக்கம்: 10, புதிய வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [6338]

சாவகச்சேரி - சந்தையிலிருந்து $\frac{1}{2}$ மைல் தூரத்தில் கச்சாய் வீதியில், பொன்னம்பலம் வீதிக்கு அண்மையில் 4 பரப்புச் சதுரக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும்: யோ. யோகேஸ்வரன், 19, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம். [6345]

ஆனைக்கோட்டை-கூளாவடியில், $3\frac{1}{2}$ பரப்புக் காணியும். வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: தி சீ. இராசேந்திரம் மாஸ்டர், கூளாவடி ஒழுங்கை, ஆனைக்கோட்டை 6330

தும்பளை, பருத்தித்துறை முருகையன் கோவிலுக்கு அண்மையில் வீடுகள் கட்டக்கூடிய 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: பசு. சுப்பிரமணியம், சட்டத்தரணி, தும்பளை, பருத்தித்துறை. 6235

வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் வீடு கட்டுவதற்கு ஏற்ற 12 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: தி சிவநேசன், மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டை. 6342

விற்பனையாகின்றன!
இறக்குமதி
ஒட்டுப் பலகைகளும்
அழகிய தேக்கம்
முகப்புக் கதவுகளும்
வேண்டிய
அகல, உயரங்களில்
பெற்றுக்கொள்ளலாம்
இப்ராகிம்
ஜபார்ஜி,
218, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.
போன்: 22409

## விற்பனைக்கு

$3\frac{1}{2}$ பரப்பு வீடு கட்டக்கூடிய பனை, மா, முதலிய பிரயோசனங்கள் கிணறு ஆகியவற்றுடன் வல்வெட்டிக்குறிச்சியில் விற்பனைக்கு உண்டு. பிரித்தும் விற்கப்படும் விபரங்களுக்கு கடிதமூலம் தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: விளம்பர இல: 6273 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். (6273)

நெல்லியடி பஸ்தரிப்புநிலைய முன்பாக உள்ள கடைக்கட்டிடம் விற்பனைக்கு உண்டு முழு விபரம் தெரிந்துகொள்ள வானதி ஸ்ரோர்ஸ், 300, கே கே எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்க. 6295

3 சில்லு லம்பிறர்ரா மோட்டார் வாகனம் (Van உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். இரட்சணிய சேனை இல்லம், கண்டி வீதி, கைதடி. 6313

## தேவை

தாதிய சேவை தெரிந்த பெண்தாதியர்கள் தேவை மாதம் பூராவும் வேலை உண்டு. விடுதி பாதுகாப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி திருமதி பா. தம்பிராசா மாதகல் மேற்கு மாதகல். 6346

கிளிநொச்சியில் உங்கள் விற்பனைப் பொருள்களுக்கு விளம்பரம் தேவையா? நல்ல நிலையில் ஒலிபெருக்கிக் கருவிகள் பெட்டியுடன் வாங்குவோம். தொடர்பு கொள்ளவும் நிர்வாகி கிளிநொச்சி விளம்பர சேவை இல: 30 A. V. R. கட்டிடம் ஸ்ரேசன் வீதி, கிளிநொச்சி. 6337

மானிப்பாய், ஆனைக்கோட்டைப் பகுதிகளில் சகல வசதிகளுடன் கூடிய வீடுவாடகைக்கு உடனடியாகத் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: P. இராசலிங்கம், விதானை வளவு, மானிப்பாய் 6328

யாழ்நகரில் பிரபல்யமான ஸ்தாபனம் ஒன்றிற்கு ஆங்கில தட்டெழுத்தும் கணக்கியலும் தெரிந்த பெண் தேவை (விவாகமானவர் விரும்பத்தக்கது) விண்ணப்பிக்கவும். விளம்பர இல 6347 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 6347

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் அச்சகத்திற்கு அனுபவமுள்ள கொம்பசிட்டர், மெசின் மைண்டர், எழுதுவினைஞர், அப்பியாசக்கொப்பி செய்பவர்களும், பழக விருப்புபவர்களும் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல: 6339, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 6339

## குத்தகைக்கு

No. 1 அலர், 25 H. P மோட்டார் 16 மூடை அவியக்கூடிய பொயிலர், தனித்தனி 54 மூடைகள் கொள்ளக்கூடிய தொட்டிகளுடனும், குத்தகைக்கு உண்டு விபரங்கட்கு K. பாலகிருஷ்ணராசா, பாலபவனம் வதிரி, கரவெட்டி [மாலி சந்திக்கும் - வதிரிச்சந்திக்கும் இடையில்] (6293)

## கல்வி

C E I Part I, 2 May 1984 (London Engineering) வார, வார இறுதி வகுப்புகள் 9-3-83 அன்று 4 மணிக்கு ஆரம்பமாகின்றது. இருபாலாரும் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி, JAST, 22, இராமையாசெட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 6276

## பயிற்சி

றேடியோ, டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங் எலக்றிக்கல் வயறிங், மோட்டார் மெக்கானிசம், Hotel Management, English செய்முறைப் பயிற்சிகளுடன் மீண்டும் ஆரம்பம் 27-02-83. விபரம் நேரில், The School of Computer Studies 52/1, கனகரத்தினம் கட்டிடம் வீனஸ் றெக்கோடிங் பார் மேல்மாடி) ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 6228

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் A. S. சங்கரப்பிள்ளை கட்டிட மேல்மாடிவாடகைக்கு விடப்படும். அறைகளும் உண்டு. அத்துடன் விசாலமான ஸ்ரோராக பாவிக்கக் கூடிய கட்டிட இடமும் வாடகைக்கு விடப்படும். முழு விபரங்களுக்கு நேரில் சந்திக்கவும். A S சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ், 162 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6326

## பிறவுண் பேப்பர்

நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பிறவுண் பேப்பர் (Brown paper மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
டொலர் கோப்பறேசன்,
178, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (6340)

யாழ். கல்வித்திணைக்கள
சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்கான
கேள்விப்பத்திரம் கோரல்-1983

மேற்படி சிற்றுண்டிச்சாலையை 01-04-1983 திகதியில் இருந்து எடுத்து நடாத்துவதற்கு கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது.
விண்ணப்ப முடிவு திகதி; 15-03-1983.
விபரங்கட்குத் தொடர்புகொள்ளவும்.

செயலாளர், பொழுதுபோக்குக் கழகம்
கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம். (6341)

## மாபெரும் நாடகப் போட்டி

அரியாலை 64-வது சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாவையொட்டி நடாத்தப்படும் நாடகப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பம் முடிவு திகதி 15-3-83.
விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி

அ. சந்திரகுமார்
22 1/5, கண்டி வீதி, அரியாலை,
(6323) யாழ்ப்பாணம்.

## விருந்துபசாரம்

யாழ். மத்திய கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு. N S. இரத்தினசிங்கம் அவர்களுக்கு எதிர்வரும் 20-03 83 அன்று யாழ். மத்திய கல்லூரிப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விருந்துபசாரம் அளித்துக் கௌரவிக்கவுள்ளது பங்குபற்ற விரும்பும் பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் 10-03-83-க்கு முன்னர் செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

M. V, நடராசா
கௌரவ செயலாளர்
யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 22572.
23-02-83. [6344]

சிறந்த முறையில், நவீன டிசைன்களில்
"ரெருசோ மாபிள் நிலம்"
அமைக்க நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஸ்தாபனம்
த ரெருசோ கொன்ருக்ரேஸ்
&கொன்சல்ரன்ஸ்
THE TERRAZZO CONTRACTORS AND CONSULTANTS
69, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Specialist in Terrazzo Flooring According to CP 204

பெல்ஜியம் விசாவுடன் இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி, சுவிஸ்லாந்துக்கும், கனடா, திரிப்பொலி, டப்ளின், நோர்வே
ஆகிய நாடுகளுக்கு மிக விரைவில் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு கொள்க!
"CROSS TRAVEL SERVICE"
2-வது தொடர்மாடிக் கட்டிடம்,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்: 22046 [6265]

## WANTED

Wanted Van Sales representative to work in Jaffna Peninsula Apply with experience Etc Advt No: 6316, C/o Eelanadu, Jaffna. 6316

Wanted Van Driver for a firm in Jaffna. Apply with experience etc. Advt. No: 6315 C/o, Eelanadu, Jaffna. 6315

## விளம்பரம்
## வெற்றுச் சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் 3000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரமூலம் விற்பனையாகவுள்ளன இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 2/- செலுத்திப் பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களை முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 2-3-83 புதன் பிற்பகல் 3-00 மணிக்கு முன்பாக சங்கக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வெற்றுச் சாக்குக்கான கேள்விப்பத்திரம்' எனக் குறிப்பிடவும். கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூ 500/- ஆகும்.

பொது முகாமையாளர்
அளவெட்டி,
மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்.
24-2-83. [6327]

ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்
## விளம்பரம்
## சாக்குக் கேள்விப் பத்திரம்

பின்வருவனவற்றிற்குக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. ரூ 2/50 செலுத்தி சங்கத்தில் இருந்து பெறப்படும் பத்திரத்தில் பொது முகாமையாளர், ப நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப் பத்திரங்கள் 3-3-83ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும் கேள்விப் பத்திரங்கள் 2-3-83ந் திகதிவரை விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரர் ரூ. 750/- வைப்புச் செலுத்தியிருத்தல் வேண்டும்.
1. வெற்றுச் சாக்குகள் 1600
2. வெற்று றப்கள் 50

பொது முகாமையாளர்
ஊர்காவற்றுறை.
23-2-83. [6335]

யாழ்நகரில்
பலவகைப்
பரிசுப் பொருட்கள்



எவர்சில்வர்
கிளாஸ் வகைகள்
ரி. வி. றேடியோ
கடிகாரங்கள்
மின் இயக்கப் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
பிளாஸ்ரிப் பூக்கள்
சமையலறை உபகரணங்கள்
எண்ணம் போல்
வண்ணத் தெரிவுக்கு
பிரவுண்சன்
ரேட் சென்ரர்
பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

★ அஸாம் படு கொலைகள்:

# பம்பாயில் பெரும் அனுதாப ஊர்வலம்!

புதுடில்லி பெப் 26

அஸாம் மாநில படுகொலைகளுக்கு அனுதாபம் தெரிவித்து மாபெரும் ஊர்வலம் ஒன்று பம்பாயில் நடத்தப்பட்டது. இந்த ஊர்வலத்துக்கு பம்பாய் நகரமேயர் தலைமை தாங்கினார். நகர முக்கியஸ்தர்கள் பலர் உட்பட ஆயிரக்கணக்கானோர் இந்தஊர்வலத்தில் பங்குபற்றினர்.

அஸ மில் தற்போது நிலைமை பெருமளவு கட்டுப்பாட்டில் உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. அஸாம் மாநில அரசின் புதிய தலைவராக திரு. ஹிதேஷ்வேர் சக்கியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. சக்கியா அஸாமில் நடந்த வீபரீதங்களால் ஏற்பட்ட நஷ்டங்களின் மதிப்பீடு சுமார் 25கோடி ரூபாக்கள் என்று தெரிவித்தார் இதே வேளை அஸாமில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பெருமளவுபொருட்கள் மத்திய அரசால் அனுப்பப்படுகின்றன

45 ஆயிரம் ஆடைகள், ஆயிரக்கணக்கில் போர்வைகள், மற்றும் போசாக்கு உணவுகள் என்பன அனுப்பப்பட்டவற்றுள் அடங்குகின்றன.

மத்திய அரசு அசாம் பாதிப்புக்களை மதிப்பிட விசேட குழுக்களையும் அனுப்பிவைத்துள்ளது

இது இவ்வாறிருக்க ஜனாதிபதி ஜியானி ஸெயில் சிங்கை லோகதள் கட்சித்தலைவர் திரு. சரண்சிங், பாரதீய ஜனதாக் கட்சித்தலைவர் திரு அடல் பிஹாரி வாஜ்பேய், ஜனதாக் கட்சித்தலைவர் திரு. மதுர் தண்டவதே ஆகியோர் நேற்று சந்தித்தனர்.

இவர்கள் ஜனாதிபதியிடம் அஸாம் மாநில தேர்தலை ரத்துச்செய்யும்படி கோரியுள்ளனர் தமது கோரிக்கைக்கு

[9ம் பக்கம் பார்க்க]

ஆபாச சுவரொட்டிகள்:

# சென்னை பொலிஸ் கமிஷனர் கடும் எச்சரிக்கை!

சென்னை பெப் 26

''ஆபாச திரைப்பட சுவரொட்டிகளை உபயோகிக்கும் சினிமா கொட்டகைகள் மீதும் அந்த சுவரொட்டிகளைத் தயாரிப்போர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று சென்னை பொலிஸ் கமிஷனர் திரு. ஸ்ரீபால் எச்சரித்துள்ளார்.

அவர் தமது எச்சரிக்கையில் மேலும் ஆபாச சுவரொட்டிகள், படங்கள் என்பன நகர வீதியில் காணப்படுவது அருவருக்கத்தக்கதென்றும் இதுவரை ஒட்டப்பட்டவை அகற்றப் படவேண்டுமென்றும் இனிமேல் ஆபாச சுவரொட்டிகள் ஒட்டப்படும் பட்சத்தில் சம்பந்தப்படுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படுமென்றும்கூறினர். (கி)

# இரேக்கத்தில் கடல் பாதை விபத்து: 7 பேர் பலி!

எதென்ஸ் பெ 11

இரேக்கத்தில் கடல்பாதையொன்றுவிபத்திலசிக்கியதால் 7 பேர்பலியானார்கள் 19 பேர் காணாமல் போயுள்ளனர்.

பண்டங்களையும், 18 பயணிகளையும், 22 சிப்பந்திகளையும் விபத்து நடந்தவேளை அந்த கடல் பாதை கொண்டிருந்தது.

அக்கடல் பாதை எது சுமந்து சென்ற லொறி வண்டியை ஆழமான கடல் பகுதியில் வைத்து வேறொன்றுக்கு மாற்றிய போதே விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் 14 பேர் மட்டுமே காப்பாற்றப்பட்டனர். ஏனையோர்களைத்

(9-ம் பக்கம் பார்க்க)

டெஸ்ட்கிரிக்கெட்:

# இந்தியா 251 மே.இந்தியா4-149

கிங்ஸ்டன் பெப் 26

மேற்கிந்தியவுடனான இந்தியாவின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் பந்தயத்தின் முதலாவது இன்னிங்ஸில் இந்தியா சகல விக்கட்டுகளையும் இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய வீரர்கள் பெற்ற ஓட்டங்கள் வருமாறு பி.எஸ். சந்து - 68 யஸ்ப்பால்சர்மா 63 வெங்கசாகர் 30 அமரநாத் 29 கவாஸ்க்கர் - 20.கபில்தேவ் 5.

மேற்குஇந்திய அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கட்டுகளை இழந்து 149 ஓட்டங்களுடன் இருந்து வருகிறது. [கி]

# ''ஹரிஜனங்கள் வாழ்வு உயரவேண்டும்''

— சோவியத் பெண்மணி

சென்னை பெப் 26

வரதட்சணைக் கொடுமை முற்றிலும் நீக்கப்பட வேண்டுமானால் அடிமட்டத்தில் உள்ள ஹரிஜனங்களின் வாழ்க்கை நிலை உயர்த்தப்பட வேண்டும்'' என்று சென்னை வந்துள்ள சோவியத் சமூகவியலாளரான திருமதி எல். ஜெனியா யொருலோவா தெரிவித்தார்.

இவர் மேலும் தெரிவித்ததாவது ''பெண்கள் தமக்கென உருவாக்கியுள்ள கழகங்கள் ஹரிஜன மக்களின் மேம்பாட்டுக்காக தீவிரமாக உழைக்கவேண்டும். வெறுமனே சமஉரிமை என்று போராடுவதில் பயனில்லை. வரதட்சணைக் கெடுபிடிகள் குறைவடைய ஏற்றத்தாழ்வற்ற சேவையே அதிக பயன் தரும் என்றார், [கி]

# மாநில அரசுகளை புறக்கணிக்கவில்லை

சென்னை பெப் 26

''மத்திய அரசு, மாநில அரசுகளின் ஒத்துழைப்பை என்றும் புறக்கணிக்கவில்லை ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்யாத மாநிலங்கள் மீது புறக்கணிக்கும் கொள்கையை மத்திய அரசு கைக்கொள்ளவில்லை.''

இவ்வாறு மத்திய விவசாய அமைச்சர் திரு ராவ் வீரேந்திரசிங் தெரிவித்துள்ளார்.





15% விலைக்கழிவு

சகல லேட்டெக்ஸ்ஃபோம் மெத்தைகளுக்கும்!

நீடித்துழைக்கும் துணி உறைகள்
கொண்ட சொகுசான லேட்டெக்ஸ் ஃபோம் மெத்தைகள்
அனைத்தும் தற்போது 15% விசேஷ விலைக்கழிவில் இடைக்கும்.

சகல ஆர்பிக்கோ காட்சிச்சாலைகளிலும் இடைக்கும்.

ஹைட்பார்க் கோணர் - ஆர்பிக்கோ காட்சிச்சாலை.
புறக்கோட்டை - றிச்சர்ட் பீரிஸ் டிஸ்ட்றிபியூட்டர்ஸ் லிமிட்டெட், பிரதான வீதி.
மொரட்டுவை - டிலும் டிஸ்ட்றிபியூட்டர்ஸ், மொரட்டுமுல்லை.
காலி - எல். எச். வர்ணபால அன்ட் பிரதர்ஸ், களுவெல்ல.
மாத்தறை - ஓ. எஸ். எம். சுபியான் அன்ட் சன்ஸ், கொட்டுவேகொட.
கண்டி : கண்டி ஃபேணிஷிங் ஹவுஸ்.
குருநாகல் - எல். பி. நாவின்ன அன்ட் சன்ஸ்.
யாழ்ப்பாணம் - ட்ரான்ஸ்லங்கா மாக்கெட்டிங் லிமிட்டெட், மாதிரி சந்தைக் கட்டிடம்.
இரத்தினபுரி - திலக ஃபேணிஷர்ஸ், மொறக்காயட்ட.
மட்டக்களப்பு ஈஸ்ரேர்ண் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் முனைவீதி

விலைகள் ரூ. 637.50 முதல்.

றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி லிமிட்டெட்
69, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 2. - தொலைபேசி 25705 - 6

விரையுங்கள்! தற்போதைய கையிருப்பு முடியும் வரை மட்டுமே சலுகை நீடிக்கும்.

LATEXFOAM நித்திரைச் சொகுசு தருவதில் நிகரற்றது.

RJA/3275



கே. ஜி. எக்ஸ்பிரெஸ் பஸ் சேவை

டிக்கெட் கட்டண குறைப்பு
பெருமையுடன் அறியத்தருகிறது
குளிரூட்டப்பெற்ற
உன்னத – உல்லாச சேவை
தினசரி நடைபெறும்.

பஸ் அட்டவணை:

கொழும்பு - யாழ்ப்பாணம்
புறப்படும் நேரம்:
இரவு 9-00 மணி
புறப்படும் இடம்:
இல, 545, ஸ்ரீ சங்கராஜ மாவத்த
கொழும்பு 10.

யாழ்ப்பாணம் - கொழும்பு
புறப்படும் நேரம்:
இரவு 9-00 மணி
புறப்படும் இடம்:
வெலிங்டன்தியேட்டர், யாழ்ப்பாணம்

டிக்கெட் கட்டணம்:
ஒருவழிக்கு ரூபா 75/- மட்டும்

கொழும்பில் பதிவு செய்யுமிடங்கள்:
1. கே ஜி. இன்டஸ்றீஸ், 545, ஸ்ரீ சங்சராஜ மாவத்த, கொழும்பு-10 போன்: 21668, 21669
2. சபயர் தியட்டர், கொழும்பு-6 போன்: 588260
3. ராஜேஸ்வரி ஹோட்டல், கோட்டை போன்: 25939

யாழ்ப்பாணத்தில் பதிவு செய்யும் இடம்:
வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம்
போன்; 22559 (6343)

இது ஒரு அறிவித்தல் மட்டுமே,முற்பகர்வு அல்ல.

# நெஸ்லே லங்கா லிமிட்டெட்

1938ம் ஆண்டின் 51ம் இலக்க கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டது

## ஒவ்வொன்றும் ரூபா 10/= கொண்ட 8,500,000 சாதாரண பங்குகளின் பகிரங்க விநியோகத்தை அறிவிக்கின்றது.

### பங்கு மூலதனம்

அதிகாரமளிக்கப்பட்டது:
ஒவ்வொன்றும் ரூபா 10/- கொண்ட 50,000,000 சாதாரண பங்குகள் - ரூபா 500,000,000

விநியோகித்து முழுப்பணமும் செலுத்தப்பட்டது:
ஒவ்வொன்றும் ரூபா 10/- கொண்ட 34,000,000 சாதாரண பங்குகள் – ரூபா 340,000,000

இந்த முற்பகர்வின் பேரில் விநியோகிக்க இருப்பது:
ஒவ்வொன்றும் ரூபா 10/- கொண்ட 8,500,000 சாதாரண பங்குகள் – ரூபா 85,000,000

### வெ. மு ஆ. கு. அங்கீகரித்த வேலைத்திட்டம்

குருநாகல் மாவட்டத்தில் உள்ள பன்னல என்னும் இடத்தில் பால் மா, குழந்தைகளுக்கான பால் உணவு, குழந்தைகளுக்கான தானிய உணவு, மோல்டட் மில்க் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றை அமைக்கும் வேலைத்திட்டத்திற்கு நிதித்திட்டமிடல் அமைச்சின் சர்வதேச பொருளாதார ஒத்துழைப்புப் பிரிவிலுள்ள வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### பிரதான தொழில்

மேலே குறிப்பிடப்பட்ட பொருட்களின் உற்பத்தியும் விற்பனையுமே கொம்பனியின் பிரதான தொழிலாகும். தொழிற்சாலை முழுவளவில் இயங்கும்போது வருடாந்த உற்பத்தி 13,500 தொன் பால்மாவும் குழந்தைகளுக்கான பால் உணவும், 2,000 தொன் குழந்தைகளுக்கான தானிய உணவு 4,000 தொன் மோல்டட் மில்க் என்பனவாக இருக்கும்.

### வெளிநாட்டு தொழில்நுட்பமும் நிபுணத்துவமும்

சுவிற்சர்லாந்து, வெவேயைச் சேர்ந்த நெஸ்லே

அமைப்புத் திட்டங்களை வகுத்து, நிறுவி, செயற்படுத்துதல், நெஸ்லே நிறுவனத்தின் வர்த்தக பெயரின் கீழ் இலங்கையில் சிலவகை பாற்பண்ணைப் பொருட்களையும் தானிய உணவுப் பொருட்களையும் உற்பத்தி செய்து பொதி செய்தல் முதலிய நடவடிக்கைகளுக்கு எல்லா தொழில்நுட்ப உதவிகளையும் பெற்றுக் கொள்ள இந்தக் கொம்பனி உரித்துடையது

### நெஸ்லே பொருட்களுக்கான கிராக்கி

நெஸ்பிறே, நெஸ்ரோமோல்ட், லக்ரோசன் முதலிய வர்த்தகப் பெயர்கள் தரத்திற்கும் போஷாக்குத் தன்மைக்கும் நன்கு பிரசித்தமானவை. நெஸ்லே குறூப்புடன் மிக நெருங்கிய தொடர்பை வைத்திருப்பதன் காரணமாக இந்தக் கொம்பனி சர்வதேச தராதரங்களுக்கு இசைவான முறையில் இலங்கையில் தரம் வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்யக் கூடியதாக இருக்கும்.

### பங்குதாரர்களுக்கு கிடைக்கும் நன்மைகள்

நெஸ்லே லங்கா லிமிட்டெட் போன்ற கொம்பனி ஒன்றின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்வது முதலீட்டு முறைகளில் மிகவுயர்ந்த இடத்தைப் பெறுகின்றது.

நெஸ்லே லங்கா லிமிட்டெட்டின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் நீங்கள் கம்பனியின் பங்காளராக மாறுகிறீர்கள். நெஸ்லே லங்கா லிமிட்டெட்டின் சுபீட்சத்திலும் முன்னேற்றத்திலும் உங்களுக்கு பங்கு கிடைக்கின்றது. உணவு, குறிப்பாக பால் உணவு மிகமுக்கியமான நுகர்வுப்பொருளாகும். அநேகமான பால் உணவுப் பொருட்கள் தற்சமயம் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இந்த இறக்குமதிப் பொருட்களுக்குப் பதிலாக பாலுணவை புதிய திட்டத்தின்கீழ் கொம்பனி உற்பத்திசெய்யும். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி இலங்கையில் இந்தப் பொருட்களுக்கு பெரும் கிராக்கி நிலவுகின்றது.

தாய் நிறுவனமாகிய சுவிற்சர்லாந்து, வெவே

### ஆகக் குறைந்த சந்தா

சிறியளவில் முதலீடு செய்வோரும் நல்லதொரு பொதுக்கொம்பனியில் முதலீடு செய்து பயனடையவேண்டும் என்பதற்காகவும் கொள்கைத் தீர்மானத்திற்கு அமையவும் நெஸ்லே லங்கா லிமிட்டெட் ஆகக்குறைந்த சந்தாவை ஒவ்வொன்றும் ரூபா 10/- கொண்ட 25 பங்குகளாக நிர்ணயித்துள்ளது. ஆகவே சிறிய தொகையான ரூபா 250 பணத்தை சேமிப்பாகக் கொண்டுள்ள ஒருவர் கூட நெஸ்லே லங்கா லிமிட்டெட்டில் பங்குதாரராகலாம் நிலையான முதலீட்டு கணக்கு ஒன்றை ஆரம்பிப்பதாக இருந்தால் குறைந்த பட்சம் ரூபா 500 சேமிக்கவேண்டியிருக்கும். தங்கம், காணி, சொத்து முதலியவற்றில் முதலீடு செய்வதாக இருந்தால் இதைவிட பெருமளவு பணம்தேவை.

### முகாமை

கொம்பனியின் பணிப்பாளர்கள் சபையிலும் சிரேஷ்ட நிர்வாகப் பீடத்திலும் அங்கம் வகிக்கும் பணிப்பாளர்களும் அதிகாரிகளும் உலகின் ஏனைய நாடுகளில் உள்ள தொழிற்சாலைகளின் திறமையான நிர்வாகத்திலும் உணவுப்பொருள் சார்ந்த வர்த்தகத்திலும் அனுபவமும் தேர்ச்சியும் வாய்ந்தவர்கள்.

### பணிப்பாளர்கள்

திரு. ஜிஷ்னு மிஸ்ரா
145/5, பார்க் றேட் கொழும்பு 5.
கம்பனிப் பணிப்பாளர்

திரு. ஜோண் வில்சன்
96/5, றெஸ்மீட் பிளேஸ் கொழும்பு 7.
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்

திரு. சாமுவேல் சென்
கேஸ் போஸ்டால் 13 1800 வெவே.
சுவிற்சர்லாந்து.
கம்பனிப் பணிப்பாளர்

### உள்ளூர் மூலப்பொருட்களின் உற்பத்தியும் பாற்பண்ணைத் தொழிலின் அபிவிருத்தியும்

### வரிநிவாரணமும் ஊக்குவிப்புக்களும்

(அ) வரிவிலக்கு - 5 வருடங்கள்.
உற்பத்தி ஆரம்பமான தினத்தில் இருந்து ஐந்து ஆண்டுகளுக்கு கொம்பனியின் லாபத்திற்கு வரியில் இருந்து விலக்கு அறிக்கப்படும்.

(ஆ) கொம்பனி வரிவிதிப்பின் குறைந்த விகிதாசாரம்.
வரிவிலக்குக் காலம் முடிவடைந்த பின்னரும் இது ஒரு பொதுக்கம்பனியாக இருப்பதால் குறைந்த வீதத்திலான கொம்பனி வரியையே செலுத்த வேண்டி இருக்கும்.

(இ) பங்கிலாபம் மீதான வரி தடுத்து வைக்கப்பட மாட்டாது.
பொதுக்கம்பனியாக இருப்பதால் பங்கிலாபம் மீதான வரி எவ்வித தடைக்கும் உட்படாமல் வழங்கப்படும்.

(ஈ) முதலீட்டு நிவாரணம்.
கொம்பனியில் ஏற்கனவே உள்ள பங்குகளைவிட வேறு சாதாரண பங்குகளை வாங்குவதில் ஒருவர் முதலீடு செய்யும் தொகை தகுதிகாண் கொடுப்பனவாகக் கருதப்படும். இது முதலீட்டாளரின் மதிப்பீட்டு வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கு உட்பட்டதாக இருக்கவேண்டும்.

(உ) பங்கிலாபத்திற்கு வரிவிலக்கு.
கொம்பனியின் வரிவிலக்கு காலத்திலும் அதற்கு ஓர் ஆண்டுகாலத்திலும் பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் பங்கிலாபத்திற்கு வருமானவரியில் இருந்து விலக்கு அளிக்கப்படும்.

(ஊ) மூலதனச்சொத்துக்களின் விற்பனை.
கொம்பனி பங்குமதிப்புக் குறிப்பீட்டை எடுத்தபின்னர் மூலதனச் சொத்துக்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்திற்கும் இலாபத்திற்கும் முதல் ஐந்து ஆண்டுகளில் வருமான வரி விலக்கு அளிக்கப்படும்.

(எ) வரிவிலக்குப் பெற்ற மூலதன

### பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்

440, ரி.பி. ஜயா மாவத்தை (டார்லி வீதி)
கொழும்பு 10.

### கம்பனியின் செயலாளர்கள்

ஜேசி அன்ட் கம்பனி,
ஹொங்கோங் அன்ட் ஷாங்காய் வங்கிக் கட்டம்
த. பெ. இலக்கம் 154 கொழும்பு.

### கம்பனிக்கும் விநியோகத்திற்குமான சட்டத்தரணிகள்

திருவாளர்கள் ஜூலியல் அன்ட் கிறீஸி,
சட்டத்தரணிகள்
ஹொங்கோங் அன்ட் ஷாங்காய் வங்கிக் கட்டடம்
த. பெ. இலக்கம் 154 கொழும்பு.

### கணக்காய்வாளர்களும் கணக்காளர்களும்

போர்ட் றேட்ஸ், தோர்ன்டன் அன்ட் கம்பனி,
பட்டயக் கணக்காளர்கள்
த. பெ இலக்கம் 186 கொழும்பு 7.

### விநயோகத்திற்கான தரகர்கள்

போர்ப்ஸ் அன்ட் வோக்கர்ஸ் லிமிட்டெட்
(ஆதாரத் தரகர்கள்)
29, பிறேபுருக் வீதி, கொழும்பு 2.

### விநியோகத்திற்கான பதிவாளர்கள்

அஸோசியேட்டட் மனேஜ்மென்ற் சேர்விசஸ் லிமிட்டெட்
546, காலி வீதி, கொழும்பு 3.

### விநியோகத்திற்கான வங்கியாளர்கள்

இலங்கை வங்கி கோப்பரேட் கிளை
யோர்க் வீதி, கொழும்பு 1.
மக்கள் வங்கி வெளிநாட்டு அலுவலக

சுவிற்சர்லாந்து, வெவேயைச் சேர்ந்த நெஸ்லே எஸ். ஏ. நிறுவனத்துடன் இந்தக் கொம்பனி பொது உத்தரவுப் பத்திர உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டுள்ளது. இதன் பிரகாரம் தொழிற்சாலைக்கான கட்டிட நிர்மாண வேலைத் திட்டங்களை வகுத்தல்', செலவின மதிப்பீடுகளைத் தயாரித்தல், அமைப்பு மாதிரிகளை வகுத்தல், ஆலைக்கான

தாய் நிறுவனமாகிய சுவிற்சர்லாந்து, வெவே நெஸ்லே எஸ். ஏ. நிறுவனம் ஒரு நூற்றுண்டுக்கும் மேலாக வளர்ச்சிபெற்றுவரும் கொம்பனியாகும். உலகெங்கிலும் உள்ள 55 நாடுகளில் இதுபோன்ற சுமார் 300 வேலைத்திட்டங்களை அது நடத்துகின்றது.

ஒருங்கிணைப்பு
மேற்கொள்ளப்படுகின்றன.


தொடர்புடைய அரசாங்க அதிகார சபைகளுடன் ஒருங்கிணைந்து பாற்பண்ணைத் தொழிலின் அபிவிருத்திக்கான விரிவான திட்டம் ஒன்று ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம் முயற்சிக்காக கம்பனி கணிசமான தொகைப் பணத்தை ஒதுக்கியுள்ளது.


லாபம்.
பங்குமதிப்புக் குறிப்பிடப்பட்ட பொதுக் கம்பனி என்ற முறையில் பங்குகளின் விற்பனை, கைமாற்றம், அன்பளிப்பு போன்ற எத்தகைய கொடுக்கல் வாங்கல்களிலும் மூலதனம் பெருகுமானல் மூலதனப் பெருக்க வரி விதிக்கப்படமாட்டாது.

பிறிஸ்டல் வீதி கொழும்பு 1
அம்ரோ வங்கி சதம் வீதி கொழும்பு
சிற்றி பாங்
ஐஸ்லண்ட் பில்டிங் கொழும்பு 3
ஐரோப்பிய ஆசிய வங்கி
யூனியன் பிளேஸ் கொழும்பு 2
கிறின்லேஸ் வங்கி
கார்கில்ஸ் கட்டடம் கொரும்பு 1
ஹட்டன் நஷனல் வங்கி
ஜனதிபதி மாவத்தை கொழும்பு 1.

# Nestlé®

## நெஸ்லே எஸ்.ஏ. வெவே, சுவிற்சர்லாந்து நிறுவனத்தின் ஆதரவு பெற்றது.





பன்னலையில் கட்டிட வேலை துரிதமாக நடைபெறுகிறது.

குருநாகல் மாவட்டத்திலுள்ள பன்னல என்னுமிடத்தில் 43 கோடி ரூபா முதலீட்டில் உருவாக இருக்கும் தொழிற்சாலையின் மாதிரி அமைப்பு.

### விண்ணப்பிக்கும் முறை

முற்பகர்வுடன் இணைக்கப்பட்டிருக்கும் படிவங்களில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். முற்பகர்வை கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்திலும் விநியோகத்திற்கான வங்கிகளின் எல்லாக் கிளைகளிலும் பங்கு விநியோக அலுவல்களுடன் தொடர்பு கொண்டுள்ள கொழும்புத் தரகர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் பின்வரும் நிறுவனங்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

போர்ப்ஸ் அன்ட் வோக்கர் லிமிட்டெட்
(ஆதார தரகர்கள்)
பார்ட்லீட் அன்ட் கம்பனி
ஜோண் கீல்ஸ் லிமிட்டெட
சொமர்வீல் அன்ட் கம்பனி லிமிட்டெட்
ஜோர்ஜ் ஸ்ருவேட் அன்ட் கம்பனி லிமிட்டெட்

கீழ்க்காணப்படும் கூப்பனை நிரப்பி, வெட்டியெடுத்து பின்வரும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் முற்பகர்வையும் விண்ணப்ப படிவத்தையும் இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

முகவரி:
நெஸ்லே லங்கா லிமிட்டெட்
த. பெ. இலக்கம் 189
440, டார்லி வீதி கொழும்பு

நெஸ்லே லங்கா லிமிட்டெட் பங்கு விநியோகத்திற்கான முற்பகர்வையும் ______ விண்ணப்பப் படிவங்களையும் தயவுசெய்து அனுப்பி வைக்கவும்.

பெயர் ______

முகவரி ______

______

______

இந்த பங்கு விநியோகத்திற்கான விண்ணப்பப்படிவங்கள்
(முன்னரே பூரணமாக விநியோகித்து முடியாவிட்டால்) ஏப்றில் மாதம் 29ம் திகதிக்கும் இடையே ஏற்றுக்கொள்ளப்படும்.

Grant, K & E 4844

# உண்ண உண்ண சுவை தரும் சோறும் கறியும் தருவது அஜி-நொ-மோட்டோ!

உங்கள் சோறு கறி உணவு ஆவலைத் தூண்டும் அற்புத ருசி கொண்டதாக மாற அஜி-நொ-மோட்டோவின் துணையை நாடுங்கள். சோறு, கறி, சம்பல், பொரியல் எதுவானாலும் சிறிதளவு அஜி-நொ-மோட்டோ தூவி உணவின் இயற்கைச் சுவையைப் பெருக்குங்கள்.

கரும்பு, பீட்றாட், மரவள்ளி முதலியவற்றின் இயற்கை மாப்பொருளில் இருந்து எடுக்கப்படும் அஜி-நொ-மோட்டோவை உலகெங்கிலும் 80 நாடுகளில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாவிக்கிறார்கள்.




சந்தைப்படுத்துவோர்:
கேவ்ஸ் சந்தைப்படுத்தும் பிரிவு
விலை: ரூ.1/10 ல் இருந்து


அஜி-நொ-மோட்டோ®
உங்கள் உணவின் சுவையை அதிகரிக்கிறது.

Minds/AJM 0008


# அரசபதவி வெற்றிடங்கள்

உள்ளூராட்சித் திணைக்களத்தில் நூலகப்பொறுப்பாளர் தரம் [ii நிரந்தர பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி க. பொ. த. [சாதாரண] பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி, அத்துடன் இலங்கை நூலகவியல் கழகம் நடாத்தும் பரீட்சையில் சித்தி, அல்லது கனிஷ்ட நூலக விஞ்ஞான தராதரப் பத்திரம் [ii ம் பாகத்தில் சித்தி அல்லது பொதுகலைப்பட்டம் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நூலகப் பொறுப்பாளராக 10 வருட அனுபவம் விரும்பத்தக்கது. வயதெல்லை 22 தொடக்கம் 40 வயது வரையாகும். விண்ணப்பிக்க கடைசித் திகதி வருகிற மார்ச் 11ம் திகதி ஆகும் விபரங்களுக்கு பெப்ரவரி 18ம் திகதி வர்த்தமானி பார்க்கவும்.

# மறக்க முடியாத நண்பர் அறிஞர் சுந்தரசிவனார்!



என் அருமை நண்பர் பேரறிஞர் காரைநகர் சண்முகம் சுந்தரசிவம் அவர்கள் அண்மையில் அமரராகிவிட்டார் என்ற செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்தேன். அறுபது வயது நிரம்பிய சுந்தரசிவனார், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் பல ஆண்டுகள் என்னுடன் கற்பித்தவர். அவருடைய அஞ்சா நெஞ்சம், ஆங்கிலப் புலமை இரண்டும் என் நெஞ்சில் நிறைந்தவை.

காரைநகரில் புகழ்பூத்த குடும்பத்தில் தோன்றிய சுந்தரசிவனார் ஆங்கிலப்பட்டதாரியாக வெளிவந்தார். பாராளுமன்றத்தேர்தலில் சமசமாசக் கட்சியின் சார்பில் போட்டியிட்டவர் சுந்தரசிவனார், தோல்வியிற் கலங்காத தோன்றல் அவர்.

சுந்தரசிவனார் இடையில் ஆசிரியப் பதவியிலிருந்து ஓய்வு பெற்று லண்டன் மாநகர் புகுந்தார். அங்கும் அவர் ஆசிரியராகவே கடமையாற்றினார். பின்னர் நைஜீரிய நாட்டை அடைந்தார். அங்கே கல்வியதிபதி ஆகி கடமை புரிந்தார். கல்வி பற்றிய அவருடைய அறிவுத்திறனும் ஆசிரியப் பயிற்சி அனுபவமும், ஆங்கிலமொழிப் புலமையும் கல்வியதிபதிப் பதவியை அளித்தன. எப்பொழுதும் தலைமைப் பதவியையே நாடும் விருப்பும் தகுதியும் உடைய சுந்தரசிவனார் பிற்போக்கான ஆபிரிக்க கண்டத்தில் நைஜீரிய நாட்டில் நல்ல கல்வித் தொண்டு ஆற்றினார் என்றே நான் கருதுகிறேன் ஓய்வுக் காலத்தில் இலங்கைக்குத் திரும்பியதன் தாய்நாட்டுக்குப் பணிபுரியும் ஆற்றலும் தகுதியுமுடைய நண்பர் சுந்தரசிவனார் திடீரெனக் காலமாகிவிட்டார். விதி யாரைத்தான் விட்டது! 'எப்பவோ முடிந்த காரியம்' என்பர் நம் வணக்கத்துக்குரிய யோகர் சுவாமிகள். அருமை நண்பர் சுந்தரசிவனாரின் ஆன்ம சாந்தி குறித்துப் பிரார்த்திப்போம்! வேறென்ன செய்வோம்!

ஆக்கம்: வித்துவான்
சி. ஆறுமுகம்.

# ரூபவாஹினியில் இன்று

6.00— இன்றைய நிகழ்ச்சிகள்
6.01 — குழந்தைகள் நிகழ்ச்சி [சிங்களம்]
6 20— ஜெர்மன் மொழி நிகழ்ச்சி
6 35— சிறுவர் நிகழ்ச்சி
7.00— செய்தி மஞ்சரி [தமிழ்]
7.15— நெத்சர [சிங்கள கல்வி நிகழ்ச்சி]
7.45— தேசிய அபிவிருத்தி பற்றி அமைச்சர்களுடனான பேட்டி
8.15— செய்தி மஞ்சரி [சிங்களம்]
8 30— கீதவாணி கலை நிகழ்ச்சி [சிங்களம்
9 00— 'காதம்பரி' பல்சுவை நிகழ்ச்சி [தமிழ்]
9 30— செய்தி மஞ்சரி [ஆங்கிலம்]
9.45— வெகாஸ் நிகழ்ச்சி 10 துப்பறியும் தொடர்கதை
10.45— ஒளிபரப்பு முடிவு


# விவசாயிகளே! இதோ புதுமையான சாக்கு



தினமும் செலவுத்தானம் கூடி வரும் வேளையில் உங்களது மூட்டையாக்கும் செலவுகூட, இலாபத்திற்கும், நட்டத்திற்கும், வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் காட்டும்.

சுப்பசக் இச்செலவை 50% ஆல் குறைக்கிறது. நெல், அரிசி, உபதானியங்கள், சோழி, பால்பண்ணை, நடத்துபவராக இருந்தால், இவை வலுவாக நீடித்து உழைக்கக் கூடியவை என்பதை உணர்வீர்கள். பகட்டையும் பார்வையையும் தருவதுடன், இவை வசதியாக அச்சிடக் கூடியவை.

இதுமட்டுமல்ல, தயக்கமின்றி சாக்குத் தைக்கும் ஊசி நூல் கொண்டு இலகுவாகத் தைக்கலாம்.

காற்று உள்ளே செல்லக்கூடிய மென்மையான சுப்பசக் சூப்பர் சாக்காகிறது.

MIKECHRIS
மைக்கிறீஸ் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்
மைக்கிறீஸ் குழுவின் கூட்டு நிறுவனம்
81, வோர்ட் பிளேஸ், கொழும்பு 7.
தொலைபேசி: 98633 - 4. 98359.

# சுப்பசக
பொலியுரேபிலின் சாக்குகள்

RJA 1145

## நோர்வே பிரதிநிதி இங்குவருவார்

(பண்டத்தரிப்பு)

நோர்வே நாட்டிலுள்ள "நோராட்" நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி திரு. ரொருசெல்லிக் சுழிபுரம் காட்டுப்புலம் கிராமத்திலுள்ள தொழுநோயாளர்களை நேரடியாகப் பார்த்து தமது நிறுவனத்தின் மூலம் தேவையான உதவிகளை அவர்களுக்கு வழங்கும் பொருட்டு அடுத்த மாதம் 9-ம் திகதியன்று வருகைதரவுள்ளார். வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் திரு. இ. விஜயரத்தினம் விடுத்த அழைப்பை ஏற்று இங்குவருகைதரும் 'நோராட்' நிறுவன பிரதிநிதி திரு. ரொருசெல்லிக் அடுத்த மாதம் 8-ம் திகதியன்று நடைபெறவிருக்கும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் தொழிற்பயிற்சி நிலையமான 'வட்டு-தொண்டேயக்' தொழிற் பயிற்சி நிலையத்தில் தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் வைபவத்திலும் பிரதம அதிதியாக கலந்துகொள்வார்.

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சரவெட்டிமேற்கு கலட்டி ஐக்கிய நணய சங்கத்தை ஸ்தாபித்து 25 வருடங்கள் செயலாளராகச் சேவையாற்றிய திரு ஐ வடிவேலுவை கௌரவித்து பாராட்டுவிழாவொன்று சங்கத்தின் சார்பில் இடம்பெற்றது.

இவ்விழாவில் திரு. வடிவேலு பொன்னுடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் பொற்கிளியும் வழங்கப்பட்டது. இவரின் சேவையைப் பாராட்டி திருவாளர்கள் த. இரத்தினம், சு ஏகாம்பரம், மு. கதிரவேல், திருமதி சந்தனவடிவு போல் ஆகியோர் உரையாற்றினர். — —

## இல்லப் போட்டி

(துணுக்காய்)

மல்லாவி மகாவித்தியாலயத்தின் இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகள் அடுத்த மாதம் 3ம் திகதி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

முல்லைத்தீவு மாவட்ட கல்வி பணிப்பாளர் திரு வீ கே. நல்லையா, வட்டாரக்கல்வி அதிகாரி திரு மு. சிவானந்தம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். இப்பாடசாலை மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டபின்னர் முதலாவதாக நடைபெறும் விளையாட்டுப் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

## கோண்டாவில் கொலை: சந்தேக நபர் பிணையில் அனுமதி

[யாழ்ப்பாணம்]

கோண்டாவிலில் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட 'நாதன்' என்று அழைக்கப்படும் செல்வநாதன் கொலை சம்பந்தமாக சுன்னாகம் பொலிசாரால் சந்தேகத்தின்பேரில் தேடப்பட்ட செ. கணேசலிங்கம் என்பவர், பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

இவர், நேற்று யாழ். நீதிமன்றத்தில் நீதவான் வி. நாகராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

தகுந்த சாட்சியங்கள் இல்லாததால் இவரைப் பிணையில் விடவேண்டும் என்று சட்டத்தரணிகள் ஆர். தவராசா, இராஜா விசுவநாதன், அமிர்தன், ராஜகாரியர் ஆகியோர் வாதாடினர்.

சந்தேகநபரை 2 ஆயிரம் ரூபா உறுதிப்பிணையில் செல்லும்படி உத்தரவிட்ட நீதவான்; தேவை ஏற்படும் போது விசாரணைக்கு வரவேண்டும் என்றும், துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பான பொலிஸ் விசாரணைகளுக்கு உதவவேண்டும் என்றும் தெரிவித்தார். [மா]

## 'விளையாட்டு மாணவரின் பண்புகளை வளர்க்கிறது'

(மட்டுவில்)

"போஷாக்குள்ள உணவு மாணவர்களின் உடல் வளர்ச்சிக்கு எத்துணை அவசியமோ அதேபோன்று அவர்களின் உடல் வளர்ச்சிக்கும் மூளை, பண்பு வளர்ச்சிக்கும் உடற்கல்வியான விளையாட்டு அவசியம். விளையாட்டுத் துறையின் மூலமே மாணவர்கள் பொறுமை, சகிப்புத் தன்மை, நன்மை, தீமைகளை எடைபோட்டு தலைமைக்குக் கீழ்ப்படிதல் போன்ற பண்புகளையும் பழகிக்கொள்ள முடியும்"

இவ்வாறு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் கனிஷ்ட பிரிவு மாணவர்களின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. கே. பாலச்சந்திரன் தலைமையில் கனிஷ்டபிரிவு அதிபர் திரு. கே. எஸ். பொன்னையாவின் மேற்பார்வையில் நடைபெற்ற இந்த விளையாட்டுப்போட்டிகளில் டிறிபேக். ஹண்ட், சின்னத்தம்பி ஆகிய இல்லங்களுக்கிடையில் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன. வட்டாரக் கல்வி அதிகாரியின் பாரியார் திருமதி சோமசுந்தரம் பரிசில்களை வழங்கினார்.

## தமிழகத்துக்கு பாசன நீர்


மைசூர். பெப். 24

தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டுள்ள வரட்சியைப் போக்க கர்நாடக மாநில அரசுபாசன நீர் வழங்க முன்வந்துள்ளது.

கர்நாடக முதலமைச்சர் இராமகிருஷ்ண ஹெக்டே ஏற்கனவே தமிழகத்துக்கு தமது மாநிலத்திலிருந்து பாசனநீர் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார். தமிழ்நாட்டின் உணவுக் களஞ்சியங்களில் ஒன்றான தஞ்சை மாவட்டத்தில் பாசன நீர் இன்றி அழியும் கட்டத்தில் உள்ள பயிர்களைப் பாதுகாக்க நீர்வழங்குமாறு தமிழ்நாடு மாநில முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் கர்நாடக முதலமைச்சரை கேட்டிருந்தமை தெரிந்ததே.

இதோ!

ரேடியன்ட் பார் சோப்




ரேடியன்ட் சலவை சோப், அதிக சலவைச் சக்தி செறிந்தமையால், துணிமணிகளைக் குறைந்த உழைப்புடன் அதிக விரைவில் கழுவ உதவும். தூய இயற்கைச் சேர்வம்சங்கள் கொண்டு இதமான வாசனையுடன் உருவான ரேடியன்ட், உங்கள் ஆடைகளும் வீட்டுத் துணிமணிகளும் அதிக வெண்மையும் அதிக பிரகாசமும் பெறச் செய்யும். ரேடியன்ட் கவர்ச்சித் தோற்ற உறையில் கிடைக்கும்.



சகல துணிமணிகளுக்கும்
அசல் வெண்மையும்...
அசல் பிரகாசமும்...
ஊட்டி, புதிய பளபளப்பான
தோற்றத்தை வழங்கும்

ரேடியன்ட்
பார் சோப் அதி வெண்மைச் சலவை
அதி பிரகாச சலவை

விநியோகஸ்தர்கள்:
யுனிவர்சல் மார்க்கெட்டிங் சேவிசஸ்

RJA 3297

# 'இறைவனுக்குச் செய்யும் பணியாகவே கருதுகிறேன்'

## பாராட்டுவிழாவில நீதிபதி

(புலோலி)

"நீதிமன்றங்கள் சிறப்பாக இயங்கி மக்களுக்கு நீதிவழங்கப்படவேண்டும் என்ற நோக்குடனேயே நான் கடமையாற்றிய இடங்களில் எனது சேவையைப் புரிந்துவந்தேன். இத்துறையில் நான் செய்யும் சேவை இறைவனுக்குச்செய்யும் சேவையாகவே நான் கொள்கின்றேன்"

இவ்வாறு பருத்தித்துறை நீதிபதியாக இருந்து பதவி உயர்வுபெற்றுச் செல்லும் நீதிபதி திரு. வி. பி. சுந்தரலிங்கத்திற்குப் பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தால் அளிக்கப்பட்ட சேவை நலம் பாராட்டு விழாவிற்கு நன்றி தெரிவித்து உரையாற்றிய நீதிபதி திரு. சுந்தரலிங்கம் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"நான் பருத்தித்துறை நீதிமன்றத்தில் குறுகியகாலம் தான் கடமையாற்றியபோதிலும் இங்குள்ள சகலரும் எனக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கினார்கள். இதனால் நான் எனது கடமையைச் சரிவரச் செய்து மக்களுக்கு நீதி வழங்க வழிவகுக்கப்பட்டது. நான் எனது சேவையை இறைவனுக்குச்செய்யும் சேவையாகவேகருதிசெய்துவருகின்றேன் எனவேதான் இங்கு பாராட்டப்பட்டபடி எனது சேவையைத் திறம்படச்செய்து நல்ல பெயரையும் பாராட்டுக்களையும் பெறமுடிந்தது. இங்கு எனது சேவையைத் திறம்படச் செய்வதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கிய சகலருக்கும் நன்றிதெரிவித்துக்கொள்கிறேன்"

சட்டத்தரணி எம். வேலும்மயிலும் (பருத்தித்துறை நகர முதல்வர்) உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: "பருத்தித்துறை சட்டத்தரணிகளில் ஒருவராக இருந்து நீதவானாக நியமனம்பெற்று மக்களுக்கு நீதிவழங்குவதில் நேர்மையாகவும், ஒழுங்காகவும், புனிதமாகவும் கௌரவமாகவும் நீதிச் சேவையை புரிந்துள்ளமையை எமது சட்டத்தரணிகள் சங்கம் மதித்துக் கௌரவிக்கின்றது. மாவட்ட நீதிமன்றத்தில் தலை சிறந்த சட்டத்தரணியாகத் திகழ்ந்த தாங்கள் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டு தற்போது மாவட்ட நீதிபதியாகப் பதவி உயர்வுபெற்று மக்களுக்குச் சேவையாற்றவுடன் உயர்நீதிமன்ற நீதிபதி மேல்நீதிமன்ற நீதிபதிபோன்ற பதவிகளுக்கும் பதவி உயர்த்தப்பட்டு சிறந்த சேவையையாற்றவேண்டும் எனப்பிரார்த்திக்கின்றோம்"

## பாடசாலைக்கு நீரிறைக்கும் யந்திரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருவையாறு அரசினர் பாடசாலையின் விவசாய அபிவிருத்திக்கென நீரிறைக்கும் இயந்திரமொன்றை கொத்தணிப் பாடசாலை நிர்வாகத்தினர் வழங்கி உள்ளனர். கொத்தணி அதிபர் இரா. சின்னத்தம்பி இந் நீரிறைக்கும் இயந்திரத்தைப் பிரஸ்தாப கல்லூரிஅதிபரிடம் வைபவம் ஒன்றில் வைத்து வழங்கினார்.

## ரூ. 1 1/2 லட்சம் செலவில் 3 மாதிரி விவசாயத் திட்டம்!

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் மூன்று மாதிரி விவசாயத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும் இதற்கான நடவடிக்கைகளை காந்திய இயக்கம் மேற்கொண்டு வருவதாக காந்திய இயக்கத்தின் மன்னார் மாவட்டச் செயலாளர் திரு. பி. கிந்தாத்துரை தெரிவித்தார்.

இம்மாதிரி விவசாயத்திட்டங்கள் உயிலங்குளம், மடு வீதி, இலுப்பைக்கடவை ஆகிய இடங்களிலேயே மேற்கொள்ளப்படும்.

## உயர் பயிற்சி நேர்முகப் பரீட்சை

[துணுக்காய்]

கூட்டுறவு உயர்பயிற்சி பெறுபவர்களுக்கான நேர்முகப்பரீட்சை யாழ் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுசபை அலுவலகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த ப. நோ. கூ. சங்கங்களைச் சேர்ந்த சுமார் 50 பேரும், தனியார் விண்ணப்பதாரிகள் சுமார் முப்பது பேரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

தமிழ்மொழி மூலம் இப் பயிற்சி யாழ்ப்பாண கூட்டுறவு கல்லூரியில் மட்டுமே நடைபெறுகின்றது.

## சனிக்கிழமையும் திறக்கப்படுகிறது

(சுழிபுரம்)

யாழ். மாவட்ட சபை உப அலுவலகத்துக்குட்பட்ட சகல இலவச ஆயுள்வேத வைத்திய சாலைகள் சனிக்கிழமைகளிலும் திறந்து நடாத்தப்படுகிறது

இம்மாதம் முதல் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது.

இவ்வாரம்முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. இனி தொடர்ந்து ஆறுநாட்கள் வைத்திய சாலை வாரத்தில் செயல்படும்.

## இடமாற்றம்

(கரவெட்டி)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை நெல்லியடி உப அலுவலக அதிகாரமளிக்கப் பட்ட உத்தியோகத்தர் திரு வ. இராமச்சந்திரன் அடுத்த மாதம் முதல் கிளிநொச்சி உப அலுவலகத்திற்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

## மானிப்பாய் கல்வி வட்டார விளையாட்டுப் போட்டிகள்

[மானிப்பாய்]

மானிப்பாய் கல்வி வட்டார உடற்பயிற்சி, மெய்வல்லுனர் போட்டிகள் அடுத்த மாதம் நடைபெற இருக்கின்றது.

உடற்பயிற்சிப்போட்டி மார்ச் 10ம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், மெய்வல்லுனர் போட்டிகள் மார்ச் மாதம் 16 17,18 ஆம் திகதிகளில் நடைபெற இருக்கின்றது.

## பத்திரிகையாளர் சுற்றுலா

(கொழும்பு)

கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு நோர்வே, டென்மார்க், சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த 23 பத்திரிகையாளர்கள் கொழும்பு வந்துள்ளனர்.

நாட்டின் பல பகுதிகளுக்கும் இவர்கள் விஜயம் செய்வார்கள்.




வளரும் பருவத்தில் தவறாது பருகவேண்டிய நெஸ்பிறே.

உலகெங்கிலும் தமது அன்புக் குழந்தைகளின் நலனில் அக்கறையுள்ள தாய்மார் நெஸ்பிறே பாலையே அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். ஏனெனில், நெஸ்பிறே உலகின் வளம் மிக்க பண்ணைகளில் இருந்து கிடைக்கும் சுத்தமான, சத்துமிக்க பாலில் தயாரிக்கப்படுகின்றது. நெஸ்பிறே சர்வதேச தராதரங்களுக்கேற்ப மிகச் சுகாதாரமான முறையில் பொதிசெய்யப்படுகின்றது. பாலின் புரதச் சத்துகளும் விற்றமின்களும் அதில் நிறைந்துள்ளன.

உங்கள் பிள்ளையை நெஸ்பிறேயில் வளருங்கள். காலை, மாலை, பகல்... எவ்வேளையும்... பசியோ தாகமோ ஏற்படும் எல்லா நேரத்திலும் அவர்கள் நெஸ்பிறே பருகட்டும். நித்திரைகொள்ளும் முன்பும் நெஸ்பிறே கொடுங்கள். தினமும் ஓடியாடிச் சுறுசுறுப்பாக வளரும் பிள்ளைகளுக்கு நெஸ்பிறே சக்தியை வழங்குகின்றது. உங்கள் பிள்ளைகள் ஆசையோடு பருகி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் வளர்வதைக் கண்டு மகிழுங்கள். இன்றே உங்கள் பிள்ளைக்கு நெஸ்பிறே கொடுங்கள்.




Nestlé
ஒரு நெஸ்லே தயாரிப்பு

400 Grams Rs 26/90 900 Grams Rs 98/25

நெஸ்பிறே® வளரும் பருவத்திற்கு வாய்த்த பால்.

Grant K & E 4787

# பரீட்சார்த்த கோதுமை விளைச்சல் வெற்றி!

## நாளையதினம் அறுவடை

(மாவிட்டபுரம்)

வலி வடக்கில் பரீட்சார்த்த மாக மேற்கொள்ளப்பட்ட கோதுமை வெற்றிகரமாக விளைந்துள்ளதால் கோதுமை அறுவடை விழா நாளை திங்கள் குரும்பசிட்டியில் நடைபெற உள்ளது.

வலி. வடக்கில் பரீட்சார்த்த மாக கோதுமை உற்பத்தி மேற் கொள்ளப்பட்டு தற்போது அதனை அறுவடை செய்ய ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

குரும்பசிட்டி அண்ணா தோட்டத்தில் 500 சதுரஅடி பரப்பில் மேற்கொள்ளப் பட்ட கோதுமைச் செய்கை வெற்றியளித்துள்ளதால் மேற்படி தோட்டத்தில் நாளை திங்கள் அறுவடைவிழா நடைபெறவுள்ளது.

இங்கு பயிரிடப்பட்ட "சொலனிக்கா" இன கோதுமை சிறப்பாக விளைந்துள்ளதால் தொடர்ந்தும் இந்த கோதுமையை கூடுதலாக பயிரிடமுடியும் என தெரிவிக்கப்படுகிறது.

குரும்பசிட்டியில் நடைபெறவுள்ள அறுவடை விழாவில் யாழ் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. எஸ். ஜெயரத்தினம் அண்ணா தோட்ட நிர்வாகி திரு எஸ். பி நடராசா மிக்கைவற் அதிபர் திரு. க கனகராஜா ஆகியோர் கலந்து கொள்வர்.

இதற்கான ஒழுங்குகளை விவசாய விசாலிப்பு சேவையாளர் திரு. கே. கந்தசாமி மேற்கொண்டுள்ளார்.

## கிரேக்கத்தில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தேடும் முயற்சிகள் தீவிரமாக்கப்படுகின்றன. விபத்துக்குள்ளான கடல்பாதை தலைகீழாக குடைசாய்ந்ததால் காணாமல் போனவர்கள் உயிர் வாழ்வது அசாத்தியம் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## பம்பாயில்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

அஸாம் மாநில தேர்தல்களின் போது வன்முறைகள் கட்டு மீறியிருந்ததை காரணங் காட்டி அத்தகைய சூழ்நிலையில் நடத்தப்பட்ட ஒருதேர்தல் நியாயபூர்வமானதாகாது என்று குறிப்பிட்டனர்.

இதேவேளை பிரதமர் திருமதி இந்திராகாந்தி எக்காரணம் கொண்டும் மறுதேர்தல் அஸாமில் நடத்தப்பட மாட்டாது என்று பத்திரிகையாளரிடம் கூறினார். அத்துடன் அஸாமில் நெருக்கடிநிலை, ஜனாதிபதி ஆட்சி ஆகியன நீடிக்கப்படமாட்டாதென்றும் அவர் கூறினார். (கி)

## ஆயுதம் தாங்கிய பொலிஸார் சேவையில்

(வவுனியா)

கிளிநொச்சி. மாங்குளம் பழைய முருகண்டி ஆகிய இடங்களில் வீதியால் செல்லும் வாகனங்கள் வழிமறிக்கப்பட்டு கொள்ளையர்களினால் பணம், நகை மு. லிய பெறுமதி வாய்ந்த பொருள்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றது.

இதனை முறியடிக்கும் நோக்குடன் இவ்வீதியால் செல்லும் வாகனங்களில் ஆயுதம் தாங்கிய பொலிசார் சிவில் உடையில் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாங்குளம், கிளிநொச்சி, வவுனியா பகுதியிலுள்ள பொலிசாரே இந்த சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

## "கம்பனைப்படித்தால்தமிழனை படித்ததற்கு சமமாகும்"

### இணுவில் விழாவில் மானிப்பாய் எம். பி.

(மாவிட்டபுரம்)

'மன்னர்கள் ஆட்சியில் எமது மொழி, கலை, கலாச்சாரங்களை மன்னர்கள் வளர்த்தார்கள், ஆனால் இன்று மக்கள் ஆட்சியில் நாமே எமது மொழி, கலை, கலாச்சாரங்களை பேணிப் பாதுகாக்க வேண்டும். அதற்கு இப்படியான மன்றங்களும் அவசியமானவை.'

இவ்வாறு இணுவில் கம்பன் கழக அங்குரார்ப்பண விழா இணுவில் சைவமகாஜன வித்தியாசாலையில் நடைபெற்ற சமயம் அதற்கு தலைமை தாங்கிப் பேசிய மானிப்பாய் எம். பி, திரு வி. தர்மலிங்கம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கம்பன் தனது காப்பியத்தில் வெறும் வரலாறை மட்டும் எழுதவில்லை. தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளையும், தனித்தன்மைகளையும் எடுத்துக் கூறினார். கம்பனை அறிந்தால் தமிழனை அறிந்ததற்கு ஒப்பாகும். இராமாயணத்தை படித்தால் தமிழனை

(10ம் பக்கம் பார்க்க)


கடைசி சிலதினங்கள்
ஹறன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்)

சில தினங்கள் மட்டும்
மனோகரா தினசரி
[யாழ். நகர்] 10-30, 2-15 6-00, 9-45.
என். டி. ராமராவ், கே. மாலதி, எஸ். வி. ரங்கராவ், ரேலங்கி
பாதாள பைரவி

வெலிங்டன் (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி. ஞாயிறு 2-30
சிவாஜி - விஜயா
ராமன் எத்தனை ராமனடி

றீகல் (யாழ். நகர்)
கடைசி வாரம்
எங்க வீட்டுப்பிள்ளை
விரைவில்
சட்டர் ஒரு இருட்டறை

வெலிங்டன்
[யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
என் அண்ணன்

லிடோ [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

சாந்தி (யாழ். நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி - பாலாஜி
நம்பியார், எம். ஆர். ராதா
என் கடமை
புத்தம் புதிய பிரதி

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
கமலஹாசன் - ஸ்ரீதேவி
குரு

கடைசி சில தினங்கள்
வின்ஸர் (யாழ். நகர்)
வசந்த மாளிகை
(புதிய பிரதி)
11-3-83 முதல்
மகாசிவராத்திரி வெளியீடு!
சிவகுமார் - சரிதா - சில்க் சுமிதா
வண்டிச்சக்கரம்
(கலர்)

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
ராஜா (யாழ்- நகர்)
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி (ஈஸ்ட்மன் கலர்)
பாடசாலை பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்து தரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.
எமது அடுத்த வெளியீடு
துணி வேதனை

சில தினங்கள் மட்டும்
ராணி தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
ஆந்திரா முதலமைச்சர் என். டி. ராமராவ், ஜெமினி - சாவித்திரி நடித்த
மாயா பஜார்
வருகிறது!
தேடிவந்த மாப்பிள்ளை
(புதிய பிரதி)



20'' (50 சிஎம்) கலர் டி.வி. - ரூ. 8950/-
17'' (43 சிஎம்) கறுப்பு வெள்ளை - ரூ. 3500/-
14'' (35 சிஎம்) கறுப்பு வெள்ளை - ரூ. 2850/-
பார்வையானது, அற்புதபடத்தெளிவு, பிரகாசமான இயற்கைவர்ணம் இலவச அன்டானா, ஒருவருட உத்தரவாதம், விற்பனைக்குப்பின் சேவை
கோல்ட்ஸ்டார்
போற்றும் பெறுமதி போற்றும் உழைப்பு.
ஏக ஏஜன்டுகள்: பான் ஏசியா லிமிட்டெட்
விற்பனைநிலையம்: 172 கெய்ஸர் வீதி, கொழும்பு 11. தொலைபேசி 22376/26598
காட்சிஅறை: 666 காலிவீதி, கொழும்பு 3. தொலைபேசி 589794
RJA 3292

# கொலைச் சந்தேகநபரது வீடு தீக்கிரை!

(மாவிட்டபுரம்)

கொலைச் சந்தேக நபரைத் தேடி அவரது வீட்டுக்குச் சென்ற பொலிசார் அவரது வீடு தீக்கிரையாகியிருந்ததைக் கண்டனர்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த வேலாயுதம் செல்வராஜா (35 வயது) என்பவர் கடந்த 14ம் திகதி கோஷ்டி மோதலில் வாளால் வெட்டப்பட்டு கொலையுண்டது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் சில நபர்களை காங்கேசன்துறைப் பொலிசார் தேடி வருகின்றனர்.

இச்சந்தேக நபர்களில் ஒருவரைத் தேடி காங்கேசன்துறை பொலிசார் அவரது வீட்டுக்குச் சென்ற சமயம் வீடு தீக்கிரையாகி இருந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

தலைமறைவாகியுள்ள நபர்களைத் தேடி பொலிசார் மீண்டும் வலைவிரித்துள்ளனர். (க)

## 15வது ஆண்டு நிறைவிழா

(யாழ்ப்பாணம்)

கணேஸ்வரம் ஐக்கிய வாலிபர் சனசமூக நிலைய 15 வது ஆண்டு நிறைவு விழா இன்று நடைபெறுகிறது.

இந்நிலையத் தலைவர் திரு. மு நாகமணி விழாவுக்குத் தலைமை தாங்குவார். எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ அமிர்தலிங்கம் உட்பட மூன்று பேச்சாளர்கள் பலர் சிறப்புரை நிகழ்த்துவார்கள்.

கலை நிகழ்ச்சிகளில் நகைச்சுவை நிகழ்ச்சி உட்பட நான்கு நாடகங்கள் இடம் பெறவுள்ளன. (கி)

# "கடந்த ஐந்து ஆண்டுகளில் 12 லட்சம் பேருக்கு வேலைவழங்கினேம்'

— ஜே. ஆர்.

(கொழும்பு)

கடந்த ஐந்தாண்டுகளில் இலங்கை பெற்ற முன்னேற்றத்தை நேற்றுக்காலை கொழும்பு சுகததாசா உள்ளக விளையாட்டு அரங்கில் நடந்த ஐக்கிய தேசியக்கட்சியின் 26 து வருடாந்த மகாநாட்டில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா விளக்கினர்.

"பன்னிரண்டு லட்சம் பேருக்கு ஐந்தாண்டு காலத்தில் வேலைவழங்கியுள்ளோம்" என்று திரு. ஜெயவர்த்தனா தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

பத்தாயிரம் பிரதிநிதிகள் இம் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

ஐ. தே கட்சியின் தலைவராக திரு என். ஜி, பி. பண்டிதரத்தின மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

நாட்டில் வன்செயல், பயங்கரவாதம் ஆகியன கட்டவிழ்த்து விடுவதற்குப் பொறுப்பாக இருப்போரைக் கண்டிக்கும் தீர்மானமும் நேற்று கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## கம்பனை---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

படிப்பதற்குச் சமனுகும்' என்றார்

### யாழ். எம். பி.

யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில் கூறியதாவது:

கம்பனையும், கம்பராமாயணத்தையும் நமது மக்கள் முழுதாக அறிய வேண்டும், அதற்கு கிராம ரீதியாக கம்பன் கழகங்களை விஸ்தரித்து பணியாற்ற வேண்டும்' என்றார்.

பேராசிரியர் திரு. இராதாகிருஷ்ணன் பேசுகையில் கூறியதாவது:

### 30 ஆண்டு ஆராய்ச்சி

கடந்த 30 ஆண்டு காலமாக கம்பனை ஆராய்ந்து வருகிறேன். அவன் பேசாத துறையே இல்லையெனலாம். எல்லாத்துறைக்கும் அவன் வழிகாட்டியாக விளங்கினன். தான் தோன்றித்தனமாக நடந்து நமது சமுதாயம் சீரழிய வழிவகுக்காமல் நமது இலக்கியங்கள் காட்டிய வழியில் நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு சபா ஜெயராஜா உட்பட பலர் பேசினர்.

பெரிதும் பரிகிற்குரிய பாத்திரம் தசரதனு, இராவணனு, பரதனு என்னும் பட்டிமன்றமும் நடைபெற்றது.

# மகாநாட்டு பிரதிநிதிகளின் வெளிக்கள ஆய்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேசபனைவள தொழிற்பாடு மகாநாட்டில் பங்குபற்றிய வெளிநாட்டு உள்நாட்டுப் பிரதிநிதிகள் கொண்ட குழுவினர் வெளிக்கள ஆய்வொன்றைமேற்கொண்டனர்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்திலிருந்து புறப்பட்ட இக்குழுவினர், நாவற்குழி கள் விற்பனை நிலையம், பனந்தும்பு நிலையம், மந்துவில் கள்ளிறக்கும் தோப்புகள், பருத்தித்துறை தெ. ப. பொ. உற்பத்திச் சங்கம், புலோலி மாதர் கி. மு. சங்கம் மாமுனை மாதிரிப் பனம்பண்ணை ஆகியவற்றுக்கு விஜயம் செய்து பார்வையிட்டனர்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பனம் உற்பத்திப் பொருள்கள் மூலம் பல்வேறு நவநாகரிக உணவு வகைகள் தயாரிக்கும் செயல்முறைகள் பற்றி திருமதி ஹைமா சேமசேகரம் பயிற்சியளித்தார். இவர் கொழும்பு மணியகம் மகளிர் கல்லூரி அதிபர்.

இப் பயிற்சியின் போது யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவிகள் உட்பட ஏராளமான பெண்கள் கலந்துகொண்டனர்.

பனைவளக்கண்காட்சி யாழ்ப்பாண மாநகர மண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

இன்றிரவு விசேஷ கலைக்கதம்ப நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. [மா]

## முல்லைத்தீவில் கடன்சபை உருவாக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அதிபர்கள் ஆசிரியர்கள் கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கான கடன் சபையை உடன் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முல்லைத்தீவுக் கல்விப் பணிப்பாளர் திரு. நல்லைநாவிடம் இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

வவுனியா மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு முல்லைத்தீவுக் கல்வி மாவட்டம் தனியாக உருவாக்கப்பட்டு இரு வருடங்களுக்கு மேல் கடந்து விட்ட பொழுதும், கடன் சபை உருவாக்கப்படவில்லை.

கல்விப்பணிப்பாளர் கடன் சபையை உருவாக்க விரைவாக நடவடிக்கை எடுக்காவிட்டால் நேரடி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட முடிவு செய்யப்பட்டுள்ளதென பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். [மயி. நி]

## மட்டு. பயிற்சி கல்லூரியில் 116 புதிய ஆசிரியர்

[வவனியா]

இவ்வாண்டு மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கு புதிதாக பயிற்சிக்கு 116 ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

சமூகக்கல்வி 13பேரும், கணிதம் 29 பேரும், விஞ்ஞானம் 32 பேரும், ஆரம்பகல்வி 24 பேரும், தமிழ் 19 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர், [க]

## இன்று

[யாழ்ப்பாணம்]

இலங்கைச் சோதிட ஆய்வு மன்றத்தின் ஆய்வரங்கு இன்று மாலை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. ஆய்வரங்கில் ரேகை சாஸ்திர நிபுணர் திரு கே. பரசிங்கராஜா, "ரேகைகளின் கிளையோட்டங்கள்" என்ற பொருளில் ஆய்வுரை நிகழ்த்துவார்.

●

இலங்கை பத்திரிகை எழுத்தாளர் இயக்கப் பொதுக்கூட்டம் இன்று மாலை யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு முன்பாகவுள்ள கலை நிறுவனத்தில் நடைபெறவிருக்கிறது.

## கதிரவேலுப்பிள்ளைக்கு யாழ். நகரில்சிலை

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் முன்னாள் எம். பியான அமரர் கி. கதிரவேலுப்பிள்ளைக்கு யாழ்ப்பாண நகரத்தில் சிலை நிறுவப்படவுள்ளது.

இச்சிலை அமைப்பதற்கான இடத்தை ஒதுக்குவதற்கான தீர்மானம் ஒன்று யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற முதல்வர் திரு இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு மேற்காக உள்ள 36 சதுர அடி நிலத்தை அனுமதிப்பதென்று முடிவு செய்யப்பட்டது. (மா)

## இளம்பெண் தீமூட்டி தற்கொலை

(பண்டத்தரிப்பு)

மனநோயினல் பீடிக்கப்பட்ட இரண்டு பிள்ளைகளின் தாயார் ஒருவர் தனக்குத் தானே மண்ணெண்ணெய்ஊற்றி தீமூட்டி தற்கொலை செய்து கொண்டார்.

அளவெட்டியைச் சேர்ந்த நிர்மலராணி என்னும் 24 வயதுடைய இவ்விளம் பெண்ணின் மரண விசாரணை யாழ். அரசினர் வைத்தியசாலையில் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் எஸ். பிரான்கிஸ் முன்னிலையில் நடைபெற்றது.

காலஞ்சென்ற இளம் பெண் நான்கு வருடங்களுக்கு முன்பு திருமணமானவர் என்றும், இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருப்பதாகவும், கடந்த இரு வருடகாலமாக இவர் மனநோய்க்கு ஆளாகி அதற்கான சிகிச்சைகள் செய்தும் பூரணமான சுகம் ஏற்படவில்லை என்றும் சம்பவதினத்தன்று தமது வீட்டிற்கு அண்மையிலுள்ள பனம் வடலிக் கூடலுக்கு சென்று மண்ணெண்ணெய்யை தனது உடலில் ஊற்றித் தீமூட்டினர். என்றும் சத்தம் கேட்டு அயலவர்கள் ஓடிவந்து தீயை அணைத்து அவரை கார் மூலம் யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதித்தனர். என்றும், அங்கு அவரது உயிர் பிரிந்துவிட்டதாகவும் மரண விசாரணையின்போது சாட்சியங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.


சகலவிதமான மணிக்கூடுகளையும்
உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ளவும்
புதிய மணிக்கூடுகளை வாங்கிக்கொள்ளவும்

டில்கா வாச் வேக்ஸ்
Dilka Watch Works
(Opposite Bus stand)
(பஸ்நிலைய எதிர் மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
போன் : 24174.



பல்கலைக்கழக வெளிவாரி
பட்டமாணிப் பரீட்சைகள்
கல்வியாண்டு 1983

B. A. பாடநெறிக்கான வகுப்புகள் மார்ச் மாதம் 5-ம் திகதி ஆரம்பமாகின்றன.

G.A.Q. பாடநெறிக்கான 2-வது பிரிவு மார்ச் மாதம் 6ம் திகதி ஆரம்பமாகின்றன.

G C. E. A/L பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் G A Q பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் G A. Q பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்களை 1-3-83 தொடக்கம் நிறுவனத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 4 - 3 - 83
REGISTRAR
ASTAN INSTITUTE
166/1, HOSPITAL ROAD - JAFFNA
or
அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்
166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## சேவைக்கால.

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஸ்தாபனத்தில் தொடர்ந்து 5 வருடங்கள் சேவைசெய்த ஊழியர்கள் கொடுப்பனவு பெறுவதற்கு தகுதியுள்ளவர்களாகின்றனர்.

கடந்த 6 மாதத்திற்கு முன்னரே இச்சட்டம் சபையின் ஒழுங்குப்பத்திரத்தில் இடம் பெற்றிருந்தபோதிலும் சில திருத்தங்கள் செய்யப்பட்டு தற்பொது நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள சுமார் 55 லட்சம் தொழிலாளர்களில் சுமார் 35 லட்சம் தொழிலாளர்கள் இச்சட்டமூலம் பயனடையவிருக்கின்றுர்கள்.

தற்போது தொழில் நீதிமன்றங்களில் விசாரணையை எதிர்நோக்கியுள்ள சுமார் 20,000 வழக்குகளில் சுமார் 15,000 வழக்குகள் இச்சட்டத்தின் மூலம் தீர்த்து வைக்கப்படும்.

இச்சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துப்பேசிய தொழில் அமைச்சர் காப்டன் செனிவரத்ன இச்சட்டம் 6 மாதத்திலிருந்து கொண்டுவரப் பட்டிருந்தாலும், பல திருத்தங்களுடன் தொழிலாளர் நன்மைக்காக கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் இச்சட்டத்தின் மூலம் நாட்டிலுள்ள தொழிலாளர்வர்க்கம் பெரும் பயனடைய விருப்பதாகவும் கூறினர். (க)

## ஐந்து இளைஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் சகோதரர்கள்) பாலசுப்பிரமணியம் நடேசபிள்ளை ஆகிய ஐவரே நேற்று விடுதலை செய்யப்பட்டவர்கள்.

மேஜர் குலதுங்காவுடன் தொடர்புகொண்டபோது சட்டமா அதிபர் இந்த இளைஞர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்வதற்கான காரணங்கள் முழுமையாக இல்லையென்றும் ஆகையால் அவர்களை விடுவிக்கும்படி பணித்துள்ளதாகவும் கூறினர். (கி)

இப்பத்திரிகை "ஈழநாடு" [illegible] பெப்ரவரி மாதம் 27-ம் திகதி [illegible] Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81 Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 and 24126;